மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ)

ஆண்டு	சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை.	
1969	13,775	பழையனவும் புதியனவும்.
1970	30,321	,,
1971	25,740	,,
1972	24,722	,,
1973 .. .. .. (ஆகஸ்டு வரை).	15,711	,,

THIRU G. SWAMINATHAN : Mr. Chairman, Sir, may I know how many Civil Surgeons and Assistant Surgeons are looking after these patients in that Clinic ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இது பற்றி விளக்கம் இல்லை. நான் அறிந்த வரையில் ஆனரரி பேராசிரியர் ஒருவரும், ஒரு அரசாங்கத் துணை மருத்துவரும் (அஸிஸ்டென்ட் சர்ஜன்) இடம் பெற்றிருக்கிறார்கள்.

Barbers and Dhobies affected by Floods.

* 197Q.—THIRU M. MASILAMANI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of families of Barbers and Dhobies affected by the floods in Tamil Nadu during 1972 ;

(*b*) the assistance rendered by the Government to them ; and

(*c*) the number of houses affected ?

வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட முடிதிருத்துவோர், சலவையாளர்கள்.

திரு. மு. மாசிலாமணி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1972ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் தமிழ் நாட்டில் பாதிக்கப்பட்ட முடிதிருத்துவோர், சலவையாளர் குடும்பங்கள் எத்தனை ?

1973 டிசம்பர் 4]

(இ) இதற்கு அரசு வழங்கிய உதவிகள் யாவை ?

(உ) எவ்வளவு வீடுகள் பாதிக்கப்பட்டன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட முடிதிருத்துவோர், சலவையாளர்களின் குடும்பங்கள் கீழ்க் கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது :—

(அ) முடிதிருத்துவோர்	1,097
சலவையாளர்	1,605
மொத்தம்	2,702

(இ) மேற்கண்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட முடிதிருத்துவோர், சலவையாளரின் குடும்பங்களுக்கு கீழ்க்கண்டவாறு அரசினரால் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது:—

	ரூ.
முடிதிருத்துவோருக்கு	83,750·00
சலவையாளருக்கு	1,22,130·00
மொத்தம்	2,05,880·00

இது தவிர அந்தக் குடும்பங்களுக்கு தக்காவிக் கடன் உதவியும் வழங்கியுள்ளது :—

	ரூ.
முடிதிருத்துவோருக்கு வழங்கிய தக்காவிக் கடன் ..	13,000
சலவையாளருக்கு வழங்கிய தக்காவிக் கடன் ..	13,000
மொத்தம்	26,000

(உ)

பாதிக்கப்பட்ட முடிதிருத்துவோருடைய வீடுகளின் எண்ணிக்கை. ..	1,092
சலவையாளருடைய வீடுகளின் எண்ணிக்கை ..	1,602
மொத்தம்	2,694